# DEPOSITION OF WITNESS

( Chapter XXIII Code of Criminal Procedure )

IN THE COURT OF DISTIRCT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, RADHAPURAM

C.C. NO. 122 /2020

Deposition of witness for Prosecution : PW– 4

| | | |
|---|---|---|
| Name | : | Muthu Selvan |
| Father/ Husband Name | : | Ayyam perumal |
| Village | : | Illayanainarkulam |
| Taluk | : | Radhapuram |
| Age | : | 34 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X 1873 on the 16th day of August 2022.

**<u>முதல் விசாரணை</u>**

நான் தற்போது இளைய நயினார் குளத்தில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். காட்டப்படும் பார்வை மகசரிலுள்ள 1 வது கையொப்பம் என்னுடையது தான். சுமார் 4, 5 வருடத்திற்கு முன்பு மாலை 4, 5 மணியளவில் இளைய நயினார் குளம், அம்மன் கோவில் அருகில் வைத்து போலீசார் விசாரித்து விட்டு என்னிடமும், ராமலட்சுமி என்பவரிடம் கையொப்பம் பெற்றனர். **எனது கையொப்பம் மட்டும் அ.சா.ஆ. 2 ஆகும்.** இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u> –** நான் கையொப்பம் செய்த தாளில் என்ன எழுதியிருந்தது என்று நான் வாசிக்கவில்லை, போலீசார் என்னிடம் படித்து காண்பிக்க வில்லை என்றால் சரிதான். நான் தோட்ட வேலை முடித்து மாலை 5 மணியளவில் என்னிடம் கையொப்பம் பெற்றனர். அ.சா. 1 –ன் கணவரை எனக்கு நன்கு தெரியும். நான் காவல் நிலையத்தில் வைத்து கையொப்பம் செய்து விட்டு அ.சா. 1 –ன் கணவர் எனக்கு அறிமுகமானவர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.